சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி - சென்னை, தரமணி, மையப் பாலிடெக்னிக் கல்லூரியில் திறன்மிகு உதவியாளராக பணியாற்றிய திரு.ப.ஞானசேகரன், என்பவர் 07.08.2018-அன்று பணியிடை மரணமடைந்ததையடுத்து அவரது வாரிசுதாரர் (மகன்) திரு.ஞா.பிரபாகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் சென்னை, தரமணி, அச்சுத் தொழில்நுட்பப் பயிலகத்தில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கியது - பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

---

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (3ப) எண்.11

நாள்:12.04.2023.
சுபகிருது வருடம், பங்குனி 29
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண். 25043/டி3/2022, நாள். 06.10.2022.

----

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வித் துறையில் சென்னை, தரமணி, மையப் பாலிடெக்னிக் கல்லூரி, திறன்மிகு உதவியாளராகப் பணியாற்றி வந்த திரு. ப. ஞானசேகரன் என்பவர் பணியிலிருக்கும் போது 07.08.2018 அன்று பணியிடை மரணமடைந்து விட்டதால், அவரது மனைவி திருமதி. ஜி. தனம் என்பவர் தனது மகன் திரு. ஞா. பிரபாகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 27.08.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இவர் எஸ்.எஸ்.எல்.சி படிப்பை மார்ச்2016-ல் தேர்ச்சி பெற்றுள்ளார். என்றும் அன்னாரின் பிறந்த தேதி 27.09.2000 ஆகும் என்றும் திரு. ஞா. பிரபாகரன் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.23862/டி3/2021, நாள்.28.06.2022-ன்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டது என்றும் திரு. ஞா. பிரபாகரன் தொழில் நுட்பக் கல்வித் துறையில் சென்னை, தரமணி, அச்சுத் தொழில்நுட்பப் பயிலகத்தில் 04.07.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும் தெரிவித்து இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. ஞா. பிரபாகரன், என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 04.07.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், தொழில்நுட்பக் கல்வித்துறையில் சென்னை, தரமணி, மையப் பாலிடெக்னிக் கல்லூரியில் திறன்மிகு உதவியாளராக பணியாற்றி வந்த திரு.ப. ஞானசேகரன் என்பவர் 07.08.2018 அன்று பணியிடை மரணமடைந்ததை அடுத்து கருணை அடிப்படையில் சென்னை, தரமணி, அச்சுத் தொழில்நுட்பப் பயிலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள அவரது வாரிசுதாரரான (மகன்) திரு.ஞா. பிரபாகரன் என்பவர் அன்னார் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாளான 04.07.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.18049/ட்டி1/2022, நாள்.07.12.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண்.4321633/ஜி1/2023, நாள்.20.03.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை - 600 025.
முதல்வர், அச்சுத் தொழில்நுட்பப் பயிலகம், தரமணி, சென்னை - 600 113.
(தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
திரு.ஜா. பிரபாகரன், இளநிலை உதவியாளர்
அச்சுத் தொழில்நுட்பப் பயிலகம், தரமணி, சென்னை - 600 113.
(தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

12.4.23
பிரிவு அலுவலர்.

12/4/2023